அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 12

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **சுட்டெண்:** | |

## பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. தொன்னூல் விளக்கம் எனும் இலக்கணநூலை எழுதியவர்
   1. ☐ வீரமாமுனிவர்
   2. ☐ தொல்காப்பியர்
   3. ☐ பாணினி
   4. ☐ பவணந்திமுனிவர்

2. குலோத்துங்கசோழனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட சிற்றிலக்கியம்
   1. ☐ இனியவை நாற்பது
   2. ☐ தமிழ்விடுதூது
   3. ☐ கலிங்கத்துப்பரணி
   4. ☐ நந்திக்கலம்பகம்

3. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம், ஈழம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஐரோப்பியர்
   1. ☐ போர்த்துக்கேயர்
   2. ☐ ஒல்லாந்தர்
   3. ☐ பிரெஞ்சுக்காரர்
   4. ☐ ஆங்கிலேயர்

4. மொழிக்கு இறுதியில் வராத எழுத்துகளை மட்டும் கொண்ட தொகுதி
   1. ☐ ன், ம், ண்
   2. ☐ த், ப், ங்
   3. ☐ ய், ள், ல்
   4. ☐ ண், ர், ழ்

5. அறத்தின் வழியாலன்றி உலகத்தை
   1. ☐ செம்மைப்படுத்தவேண்டும்
   2. ☐ செம்மைப்படுத்தலாகும்
   3. ☐ செம்மைப்படுத்தமுடியும்
   4. ☐ செம்மைப்படுத்தமுடியாது

6. நிறைந்த அறிவுடையார் பணிவாக இருப்பர் என்பதை வலியுறுத்தும் பழமொழி
   1. ☐ காய்த்த மரம் கல்லடிபடும்
   2. ☐ காய்த்த கொம்பு பணியும்
   3. ☐ துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
   4. ☐ கடுகு சிறிது காரம் பெரிது

7. அம்மம்மா பாகற்காய் வற்றல் போட்டார். இதில் தொழிலாகுபெயர்

1. ☐ பாகற்காய்
2. ☐ போட்டார்
3. ☐ அம்மம்மா
4. ☐ வற்றல்

8. தற்காலத்தில் பட்டப்பகலிலும் திருடர்கள் உலாவுகின்றனர். பட்டப்பகல் என்பது

1. ☐ அடுக்குத்தொடர்
2. ☐ இணைமொழி
3. ☐ இரட்டைக்கிளவி
4. ☐ அடுக்கிடுக்குத்தொடர்

9. காரண இடுகுறிப்பெயராக அமைவது

1. ☐ முள்ளி
2. ☐ மூக்குத்தி
3. ☐ மரம்
4. ☐ பறவை

10. உண்டனன் என்ற பகுசொல்லின் பிரிப்பு வடிவம்

1. ☐ உண் + ட் + ஆன்
2. ☐ உண் + ட் + ஆன் + அன்
3. ☐ உண் + ட் + அன் + அன்
4. ☐ உண் + ட் + அன் + ஆன்

11. பத்துப்பாட்டு நூல்களுள் சிற்றிலக்கிய வகையுள் அடங்குபவை

1. ☐ முல்லைப்பாட்டு
2. ☐ குறிஞ்சிப்பாட்டு
3. ☐ நெடுநல்வாடை
4. ☐ ஆற்றுப்படைநூல்கள்

12. அழகு, மங்கை, துன்பம் எனப் பலபொருள் குறிக்கும் ஒருசொல்

1. ☐ வனப்பு
2. ☐ அணங்கு
3. ☐ உவகை
4. ☐ எழில்

13. திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

1. ☐ கார்டுவெல்
2. ☐ யோசப்பெசுக்கி
3. ☐ யி.யு.போப்
4. ☐ டி.நொபிலி

14. எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது. எளிது என்பதன் எதிர்ப்பொருட்சொல்

1. ☐ இலகு
2. ☐ சுலபம்
3. ☐ செறிவு
4. ☐ கடினம்

15. செய்யுள்களில் ஒவ்வொரு அடியிலுமுள்ள சொற்களின் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

1. ☐ எதுகை
2. ☐ மோனை
3. ☐ சிலேடை
4. ☐ உருவகம்

16. இவன் நண்பனுமல்லன்; நல்லவனுமல்லன். இதில் உம் எனும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1. ☐ தெரிநிலை
2. ☐ சிறப்பு
3. ☐ எச்சம்
4. ☐ இழிவு

17. 'பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' இக் கூற்று இடம்பெற்ற நூல்

1. ☐ சிலப்பதிகாரம்
2. ☐ அகநானூறு
3. ☐ நற்றிணை
4. ☐ வளையாபதி

18. எட்டு + குணம் என்பதன் புணர்ச்சி வடிவம்

1. ☐ எட்டுக்குணம்
2. ☐ எட்டுகுணம்
3. ☐ எண்குணம்
4. ☐ என்குணம்

19. ஈழத்தமிழர் புலம்பெயரும் நிலைக்கு ஆளாக்கப்பட்டமைக்கான காரணங்களுள் ஒன்று

1. ☐ உள்நாட்டுப்போர்
2. ☐ தொற்றுநோய்
3. ☐ புவிநடுக்கம்
4. ☐ காட்டுத்தீ

20. வண்ணம், வன்னம் இச்சொற்கள் முறையே தரும் பொருள்கள்

1. ☐ விதம், அழகு
2. ☐ அழகு, விதம்
3. ☐ விதம், நிறம்
4. ☐ நிறம், அழகு

21. அவர்கள் கூறியதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதில் பார்க்கவேண்டும் என்பது

1. ☐ தன்மை வினைமுற்று
2. ☐ படர்க்கை வினைமுற்று
3. ☐ முன்னிலை வினைமுற்று
4. ☐ மூவிடத்துக்கும் பொதுவான வினைமுற்று

22. தமிழ் ஒலிமரபுக்கும் வடமொழி ஒலிமரபுக்கும் மாறுபடாமல் தமிழில் வந்து வழங்கும் சொல்

1. ☐ தற்பவம்
2. ☐ தற்சமம்
3. ☐ கிரந்தம்
4. ☐ தமிழி

23. “ஈழத்தமிழரை ஆதரிக்கிறேன்; என் தலை கொய்யினும் கொய்க!” எனக் கூறியவர்

1. ☐ பாவலரேறு பெருஞ்சித்திரனார்
2. ☐ மயூரம் வேதநாயகம்பிள்ளை
3. ☐ மயிலை வேங்கடசாமி
4. ☐ ஈரோடு வே. இராமசாமிப்பெரியார்

24. வருவார் என்பதன் பிறவினை வடிவம்

1. ☐ வருவித்தார்
2. ☐ வருகிறார்
3. ☐ வருவிப்பார்
4. ☐ வருவிக்கிறார்

25. இளநிலா வெள்ளி மோதிரம் அணிந்திருந்தாள். இதில் வெள்ளி மோதிரம் என்பது

1. ☐ இரண்டாம் வேற்றுமைத்தொகை
2. ☐ மூன்றாம் வேற்றுமைத்தொகை
3. ☐ ஐந்தாம் வேற்றுமைத்தொகை
4. ☐ ஏழாம் வேற்றுமைத்தொகை

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இயற்கையோடிணைந்து வாழ்ந்த பழந்தமிழர் குமுகாயத்தில் ஆரியரின் ஊடுருவல் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?

2. பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு எழுதுக.

3. ஈழத்தில் போர்க்காலச் சூழலில் வெளிவந்த புதுக்கவிதைகள் எவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டு படைக்கப்பட்டன?

4. பண்டைத்தமிழரின் அகவாழ்வினுள் அடங்கும் பண்புகள் நான்கு எழுதுக.

5. இலக்கியவகைச் சொற்களுள் இரண்டினைத் தந்து, அவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

6. தெரிநிலைவினைமுற்று, குறிப்புவினைமுற்று இவற்றிற்கு இடையிலான வேறுபாட்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

7. அன்பளிப்பு, ஆற்றுமணல் என்பன எவ்வகைக் குற்றியலுகரப் புணர்ச்சியுள் அடங்கும்?

(5X2=10 புள்ளிகள்)

**3. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. இயற்கையழகு
2. 

(4 புள்ளிகள்)

**4. பந்தியை வாசித்து, அதன் மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

தகவல் தொடர்புப் பரிமாற்றம் என்பது ஒரு கலை. இது நாளுக்கு நாள் புதுப்பொலிவு பெற்று வளர்ந்து வருகின்றது. இதனை ஒரு குறிப்பிட்ட வகையாக வரையறுக்கமுடியாது. அன்றாடம் நாம் நூல், செய்தித்தாள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி போன்றவற்றைப் பயன்படுத்துகையிலும் மின்னஞ்சல், கணினி, இணையம் போன்றவற்றைப் பயன்படுத்துகையிலும் தகவல்களைப் பரிமாற்றிக்கொண்டே இருக்கிறோம்.

இவற்றைவிட நமக்கு மிகவும் பழக்கமான தகவல் பரிமாற்றம் ஒன்றிருக்கிறது. அதுதான் செய்கை மூலம் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வது. மாந்தர் தங்கள் முக உணர்ச்சிகளாலும் உடலசைவுகளாலும் எத்தனையோ செய்திகளைப் பரிமாற்றிக் கொள்கின்றனர். ஏதாவதொரு செய்தியை நாம் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்கிற செயலைத்தான் தகவல் தொடர்பு என்கிறோம். இது சொற்களாலானதாகவும் இருக்கலாம், சொற்களற்ற செயல்களாலானதாகவும் இருக்கலாம். இவற்றைவிட முக்கியமான, நமக்கு மிகவும் பழக்கமான மற்றொரு தகவல் பரிமாற்றம் மாந்த உடலமைப்பேயாகும். உடலில் உள்ள நரம்புகள் மூளைக்குத் தகவல்களைச் சரியாக எடுத்துச் செல்வதில்தான் மாந்த உயிரின் இயக்கமே தங்கியுள்ளது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் அழும் ஓசைகூட ஒருவகைத் தகவல் பரிமாற்றம்தான் என்கிறார்கள் அறிஞர்கள். குழந்தை தன் தாயுடன் முதன்முதலாகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் ஓசைதான் அழுகை.

இந்த இயற்கையான தகவல் பரிமாற்றம் காலத்திற்கேற்ப மாறுபட்டு வந்துள்ளது. ஆதி மாந்தர்கள் பறை கொட்டுதல், சங்கு ஊதுதல், புகை எழுப்புதல், தீப்பந்தம் ஏற்றி வைத்தல், மணி ஒலித்தல் போன்ற செய்கைக் குறியீடுகளால் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். அதேவேளை தமது எண்ணங்கள், கற்பனைகள், கதைகள் போன்ற ஆழமான கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்குப் பாட்டு, கவிதை போன்றவற்றைப் பயன்படுத்தினர். இன்று மின்னணுத் தொடர்புக் கருவிகள் மூலமாக மின்னல் வேகத்தில் தகவல் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. எதிர்காலத்தில் மேலும் பல புதிய நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படலாம். இதனாலேயே, தகவல் தொடர்புப் பரிமாற்றம் வளர்ந்து வரும் ஒரு கலையாக மதிக்கப்படுகிறது.

(4 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் உரைப்பகுதியை படித்து, தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

(4 புள்ளிகள்)

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கெடுக சிந்தை கடிதுஇவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தந்தை
யானை எறிந்து களத்துஒழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப்பட் டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்க என விடுமே!

- புறநானூறு
- ஒக்கூர் மாசாத்தியார்

1. இப்பாடலில் மேலோங்கிக் காணப்படும் உணர்வு யாது?

_______________________________________________

2. 'வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி'
இப்பாடலடியிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது என்ன?

_______________________________________________

_______________________________________________

3. 'பண்டைய மறக்குடியில் பிறந்த மகள் இவள்' என்னும் பொருள் கொண்டமைந்த பாடல் வரி எது?

_______________________________________________

(3X1=3 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. புலம்பெயர் இலக்கியங்கள்
2. மொழிக்கலப்பு
3. எமது தாயகமும் நாமும்
உள்ளடக்கக் குறிப்புகள்:
    - எம் தாயகத்தின் அமைவிடமும் அதன் சிறப்புகளும்
    - இன்றைய நிலை
    - புலம்பெயர் நாட்டில் வாழும் நாம் தாயகத்திற்கு ஆற்றவேண்டிய பணிகள்

(15 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாந்த உரிமை என்பது ஒவ்வொரு மாந்தனுக்கும் கிடைக்கப்பெறவேண்டிய மற்றும் உரித்தான அடிப்படை உரிமையும் சுதந்திரமும் ஆகும். வையகத்தில் வாழும் மாந்தர் அனைவரும் தம் உரிமைகளுடன் வாழுவதற்கான தகைமை உடையவர்கள். மாந்த உரிமைகள் என்பதனுள் குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுடன் வாழும் உரிமை, கருத்து வெளிப்பாட்டு உரிமை, சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்படும் உரிமை, பண்பாட்டு உரிமை, கல்வி உரிமை போன்றவை முக்கியமானவை. இனம், மொழி, நிறம், இறைநெறி, பால், அகவை, உடல் உள வலு ஆகியவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு தனி மாந்தனுக்கும் இந்த உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும். இன்று வையக நாடுகள் பலவற்றிலும் மாந்த நடத்தைகள், ஒழுக்கங்கள் மேம்பட்டுக் காணப்படினும் மாந்த உரிமைகள் நாடுகளின் சட்டங்களினாலும் பன்னாட்டுச் சட்டங்களினாலும் பேணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் உலக மாந்த உரிமைகள் பிரகடனம் மூலம் உலக மக்கள் அனைவருக்குமான வாழ்வுரிமைகளை வலியுறுத்தியது. அந்நாளைக் குறிக்கும் வகையில் 1950 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் 10 ஆம் நாள் உலக நாடுகள் அனைத்தாலும் மாந்த உரிமைகள் நாள் கொண்டாடப்படுகிறது.

1. உலக மாந்த உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்ட அமைப்பு எது? அப்பிரகடனம் எதனை வலியுறுத்தியது? (2 புள்ளிகள்)

 ____________________________________________

 ____________________________________________

2. மாந்த உரிமைகள் நாள் எப்போதிலிருந்து கொண்டாடப்படுகிறது? (1 புள்ளி)

 ____________________________________________

3. வையகத்தில் வாழும் மாந்தர் அனைவரும் எதற்கான தகைமையை உடையவர்கள்? (1 புள்ளி)

 ____________________________________________

4. இன்று வையக நாடுகளில் மாந்த உரிமைகள் எவற்றின் மூலம் பேணப்படுகின்றன? (1 புள்ளி)

 ____________________________________________

5. மாந்த உரிமைகள் என்பதனுள் அடங்குவனவற்றுள் நான்கினை எழுதுக. (2 புள்ளிகள்)

 ____________________________________________

6. மாந்த உரிமை என்பது யாது? (2 புள்ளிகள்)

 ____________________________________________

 ____________________________________________



(9 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுக்கு மிகப் பொருத்தமான தலைப்பினைத் தெரிவுசெய்து எழுதுக.**
**(ஒருதலைப்பு ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறையின் பெரும்பங்கு
- சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி
- மாணவர்களின் ஓவியக்கண்காட்சி
- வண்ணமொழி ஓவியமன்றத்தினரது ஓவியக்கண்காட்சி
- பெண்களின் ஓவியம் வரையும் திறமையை வளர்த்தல்

1. ______________________________________

விவேகானந்தாக் கல்லூரியின் கலைபண்பாட்டுத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களின் ஓவியக்கண்காட்சி நிகழ்வு, வண்ணமொழி ஓவியமன்றத்தினரது அனுசரணையுடன் மிகச் சிறந்த ஆக்கங்களுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் கலந்து சிறப்பித்ததுடன் அயற்பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பெரும்பாலானோரும் வந்து பார்வையிட்டு மகிழ்ந்தனர். அத்துடன், வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் திறன்விருத்திப் பணிப்பாளரும் கலந்துகொண்டு ஓவியம் வரைந்த மாணவச்செல்வங்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து மனமகிழ்ந்தார்.

2. ______________________________________

'உலகின் முதல் விண்வெளிச் சுற்றுலா' என்ற பெருமையை ரிச்சர்ட் பிரான்சனின் லிர்யின் கேலக்டிக் நிறுவனம் அடைந்துள்ளது. இதன்மூலம் விண்வெளிச் சுற்றுலா சாத்தியம் என்பது உறுதியானது. அதற்கிணங்க, தற்போது உலகப் பெரும் பணக்காரர் அமசோன் நிறுவுநர் யெப் பேசோசு தனது ப்ளூ ஆரியின் நிறுவனத்திலிருந்து முதல் விண்வெளிச் சுற்றுலாவை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். விண்வெளிச் சுற்றுலா என்ற திட்டத்தின் அடுத்த மைல்கல்லை இந்த இரண்டு நிறுவனங்களும் இரண்டு மாந்தர்களும் தொட்டிருக்கின்றனர்.

3. ______________________________________

பெண்களை மையப்படுத்தி, பெண்களின் ஆற்றலை வலுப்படுத்தும் வகையில் ஓவியக்கண்காட்சி ஒன்று புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் அகவை வேறுபாடின்றி பெண்கள் பலர் பங்குபற்றினார்கள். இக்கண்காட்சியில் பெண்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் மாவட்ட அரசாங்க அதிபர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஓவியங்கள் காட்சிப்படுத்தலில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்குப் பரிசில்களை வழங்கி மதிப்பளித்தனர்.

(3X2=6 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 03 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |